# பெயர் மாற்றம்

"சாமிநாதா!"

பதில் வரவில்லை. திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த ராமய்யர். நிமிர்ந்து உட்கார்ந்து ரேழியுள்ளே பார்த்த வண்ணம் இன்னும் உரக்க அழைத்தார் இரண்டு தடவை.

பதில் வரவில்லை. நாற்காலியில் எழ ஆரம்பித்தார். அப்பொழுது ஐந்து வயதுக் குழந்தை வாசலிலிருந்து உள் நுழைந்தான். தடாரென்று.

"சீனு, உள்ளே பார், சாமிநாதன் இருக்கிறானா என்று. இங்கே வரச்சொல்?"

இதற்குள் சீனு ரேழியுள் புகுந்துவிட்டான்; காமிரா அறைக் கதவைக் கடந்துகொண்டிருந்தான்.

"அதோ, அங்கிருக்கிறானே அத்தான், பேப்பர் படித்துக்கொண்டு, அத்தான், அப்பா உன்னைக் கூப்பிடறா!' என்று சொல்லி விட்டு, தன் கடமையைச் செய்துவிட்டு, உள்ளே மறைந்துவிட்டான் சீனு.

ராமையருக்குத் தூக்கிவாரிப் போட்டது. பத்திரிகையைப் பிரித்துப் பிடித்தவாறு தூங்குகிறானா என்ன மருமகன்? பார்க்க எழுந்தார்; உள்ளே சென்றார். பத்திரிகையின் சலசலப்பொலி கேட்டது.

"சாமிநாதா!'

இதற்கும் பதிலில்லை. காமிரா அறைக்குள்ளே நோக்கினார்.

"என்னடா இது? உன்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு எனக்குத் தொண்டை கட்டிவிட்டது. பதிலே பேசவில்லை நீ!" என்றார்.

"என்னையா? என் பெயர் சாமிநாதனில்லையே! 'சீனு' மாமா" என்று சொல்லிக்கொண்டே, கட்டிலில் காலை நீட்டிக்கொண்டு சாய்ந்து படுத்திருந்தவன், காலை மடக்கிக்கொண்டு நிமிர்ந்தான்.

ஒரு நொடி பிரமிப்பை வெளியிடும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'அப்படியானால், தபாலில் வந்த இந்தக் கடிதம் உனக்கு அல்லவா? யாரோ நடராஜனாம், போத்தனூரிலிருந்து போட்டிருக்கிறான்!' என்று கையிலிருந்த உறையை நீட்டினார் ராமையர்.

"நடராஜனா? எங்கே! எனக்குத்தான் கடிதம்!"

"விலாசத்தில் சாமிநாதன் என்றே காண்கிறது! உனது எப்படியாகும்?"

"நான்தான் சாமிநாதன்! என் நண்பன்தான் இந்த நடராஜன், போதனூரில் வேலையாயிருக்கிறான்!"

"சரி, இந்தா, சாமிநாதா!" என்றவண்ணம் கடைசியில் குறும்புச் சிரிப்புடன், அவனிடம் உறையைக் கொடுத்தார் ராமையர்.

"முற்பகல்தான் ரயிலைவிட்டு இறங்கினாய், பிற்பகலே கடிதம் வந்துவிட்டது உன் பெயருக்கு! நீ இருப்பது வடக்கே, அவன் இருப்பது தெற்குக்கோடி! அவன் உத்தியோகம் பார்ப்பவன், நீ கல்லூரி மாணவன்! இப்படித்தான் இருக்கணும் நண்பர்கள்!" என்று வாழ்த்துவதுபோல கூறிவிட்டு வெளிவந்தார் ராமையர். அவர் கையிலும் மூன்று கடிதங்கள் இருந்தன. அவற்றைப் படிக்க வேண்டாமா?

திண்ணைக்கு வந்து கொண்டே "சீனு!" என்றார்,

"ஏன்?", "ஏன்!"

இரண்டு குரல்களில் பதில் வந்தது. மென் குரலில் வந்த பதிலுக்கு மென்குரலிலேயே, "உன்னையல்லப்பா, சாமிநாதா!" என்று கூறிவிட்டு, உரக்க வந்த பதிலுக்கு, உரக்கவே, "மூக்கண்ணாடியைக் கொண்டாப்பா!" என்று மகனை ஏவினார் ராமையர்.

தந்தை ஈஸிச்சேரில் அமரும் முன்பே 'டாண்' என்று கொணர்ந்து கண்ணாடிப் பெட்டியை நீட்டினான் சீனு. "பேஷ்!" என்று அவர் அதை வாங்கிக்கொண்டு, 'எங்கே ஓட்டம் வெளியே?" என வினவினார்.

"கொத்தமல்லிவிரை கடையிலிருந்து வாங்கி வரச்சொன்னாள் அம்மா!" என்று கத்திக்கொண்டே வாசலில் மறைந்துவிட்டான் சீனு.

"குழந்தையைக் கடவுள்தான் காக்கணும்! ஐந்தே வயது. வீட்டிற்கு எத்தனை ஒத்தாசை இவனால்! இவனால் அல்லவோ குடும்பம் நடக்கிறது?" என்று உதித்த எண்ணத்தால், கண்களில், நீர் அரும்பியதோ, அல்லது மூக்கண்ணாடி போட்டுக்கொள்ளுமுன் கண்ணைத் துடைக்கும் பழக்கமோ, கண்ணைத் துடைத்துக் கொண்டார் ராமையர்.

இவர் இங்கேயும், சாமிநாதன் உள்ளேயும் தமக்கு வந்த கடிதங்களின் ரகசியங்களை நுகர்கையிலே, நாமும் சில ரகசியங்களைக் கேட்போம்.

சாமிநாதன் பெயர் சாமிநாதன் தான்;அவனுடைய தந்தையைப் பெற்ற தாத்தாவின் பெயர் அது. முறைப்படி, உலக வழக்கப்படி, அவனுக்கு நாமகரணம் செய்யப்பட்ட பெயர். ஆனால் மற்றொரு வழக்கப்படி அவனுக்கு ஒரு செல்லப்பெயரும் உண்டு. செல்லப் பெயர்களை வைத்து அழைக்க வேண்டியது அவசியம்தான். ராஜகோபாலன், வெங்கட சுப்பிரமணியன் என்றெல்லாம் நீண்டு முழங்கும் பெயர்களை, அழகாகக் குறுக்கி, அழைக்க வேண்டியதுதான். கடவுளுக்கும் மூதாதையர்க்கும் பயந்து இதுபோன்ற பெரிய பெயர்களை மக்களுக்கு இட்டாலும், கடவுள் பக்திக்கும்,. பிதிர்பக்திக்கும் சிறிதும் ஒவ்வாதவாறு அந்தக் குழந்தைகளைத் தலையில் குட்டவும், வைது கரிக்கவும் பெரியோர்க்குக் கடமையாக நேருகிறபோது, "ராஜு, நாணு, சுப்பு" என்ற செல்லப் பெயர்கள் எவ்வளவு சரளமாய் உதவுகின்றன! ஆனால் சாமிநாதனுக்கு வாய்த்த செல்லப் பெயரோ, அந்தப் பெயருக்குச் சிறிதும் இலக்கணச் சம்பந்தமற்ற ஒரு பெயர் "சீனு' என்பது! சாமிநாதனுடைய பாட்டனார் பெயரை, அவருடைய நாட்டுப் பெண்ணாகிய சாமிநாதனின் அன்னை அழைப்பது பாந்தமில்லை என்று, அவளது தாய் பொறுக்கி வைத்த பெயர் அது! தாயைப் பெற்ற பாட்டி வைத்த பெயரே சாமிநாதனுக்கு ஒட்டிக்கொண்டது. எல்லோரும் செல்லமாய் 'சீனு' என்றே அவனை அழைத்து வந்தார்கள். ஆனால் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்பொழுதோ, 'சாமிநாதன்' என்றே அவன் பெயரைத் தந்தைப் பதிவு செய்தார்!

அந்தச் சிறுவயதிலே - வீட்டில் ஒரு பெயரும் பள்ளியில் ஒரு பெயருமாகக் குழந்தை என்ன திண்டாடிற்றோ, அந்த இரட்டை வாழ்வை எப்படிச் சமாளித்ததோ, இப்பொழுது ஒருவர்க்கும் ஞாபகமில்லை. ஆனால், இருபது வயது நிரம்பும் இந்த வயதில், காசிச் சர்வகலாசாலையிலே எம்.எஸ்.ஸி படிக்கும் இக்காலத்தில், 'சாமிநாதன்' என்னும் பெயர் அவனுக்கு நாராசமாகத் தோன்றுகிறது. 'சீனு' என்று ராமையர் தமது மைந்தனை அழைக்கும்போது எத்தகைய அன்பும் இனிமையும் சொட்டுகிறது! அதுபோலவே தனது பெற்றோர்கள் தன்னை அழைக்கும் பொழுது தொனிக்கும் விசுவாசமும் அன்பும், 'சாமிநாதன்' என்று கல்லூரி நண்பர்கள் கூவும்போது தொனிக்கிறதா? 'சாமிநாதன்' என்று தன்னை அழைக்கும் எவரையும் அவன் 'நண்பன்' என்று மரியாதைக்குக் கூட ஒப்புக்கொள்ளமாட்டான். அவனுடைய நட்புக்கு உரிமையானோர், அவனது குறுநறும் பெயரை அறிந்து 'சீனு' என்று அழைத்து வந்தார்கள். போத்தனூர் நண்பன் உறையின் விலாசத்திலே 'சுவாமிநாதன்' என்று குறித்தாலும், உள்ளே கடிதம், "எனது ஆருயிர் சீனு!" என்றே துவங்கியது! கல்லூரியின் கணக்கு ஆசிரியர் ஒருநாள் அவனை 'சீனு' என்று தெருவில் அழைத்தபோது - இடம் நடுத்தெருவாய் இல்லாமலிருந்தால் - அவரைத் தழுவி அணைந்திருப்பான்! 'சீனு' என்று தன்னை அழைக்காத, அழைக்கத் தைரியமில்லாத வாத்தியார்களையும் அவன் ஒருபடி தாழ்வாகவேதான் மதித்தான். எனினும் குரு பக்தி குறையவில்லை. பி.எஸ்.ஸி. பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறி, இப்பொழுது காசியில்

எம்.எஸ்.ஸி. படிக்கும் அளவுக்கு அவன் தன் ஆசிரியர்களைப் போற்றியிருக்கிறான். எம்.எஸ்.ஸி தேறிவிட்டதும் ரூபாய் பத்தோ பதினைந்தோ அதிகாரிகளிடம் தொலைத்து, 'சாமிநாதன்' என்று பதித்த பெயரைச் 'சீனு' என்று மாற்றிவிட வேண்டும் என உறுதி கொண்டிருந்தான். இன்னும் ஆறேமாதத்தில் 'சீனிவாசன்' என்றுகூட அல்லது தேன் சொட்டும் சின்னஞ்சிறு 'சீனு' என்ற பெயரையே தீரமாக அணிந்துகொள்ளவே அவனது ஆசை. "சீமான் சீனு சேலத்திற்கு எலக்ட்ரிகல் எஞ்சினியராக மாற்றப்பட்டார்!" என்று சென்ட்ரல் கெஜட்டில் என்றோ ஒருநாள் பெயர் வரப்போவதாக கனவு கண்டுகொண்டிருந்தான் தற்காலிக 'சாமிநாதன்'.

இந்த நிலையில் இவனது மாமாவே, இவனை வீட்டிலே சாமிநாதன் என்று கூப்பிட்டால், இவன் மனம் கொதிக்காதா?

காலையில் பத்தேகால் மணி அவன் ஸ்டேஷனிலே வந்து இறங்கியபொழுது "வாப்பா சீனு!" என்று அவர் அன்பாக அழைத்து வரவேற்றார். 'வழிநெடுக நன்றாக தூங்கிண்டு சௌகரியமாய் வந்தாயா?" என்றார். இவனை 'சீனு!, சீனு! என்றுதான் குறிப்பிட்டு வந்தார் அப்பொழுதெல்லாம்; இப்பொழுது அவருடைய பேச்சில் மாறுதல் ஏற்பட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை!

ஆனால் ராமையர். பாவம், என்ன செய்வார்? அவருக்கு அந்த மாறுதல் அவசியம் என்று தோன்றியதே!

சாமிநாதன் வீட்டிற்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டுவிட்டது அவருக்கு. "சீனு, அசல் அப்படித்தான் தூக்குவதா தர்மாப்புட்டியை? வைடா பயலே!"' என்று ராமையர் கேட்பதைக் கேட்டதும், மருமகன் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான்;மாமா யாரைக் கோபிக்கிறார் என்று புரிந்துகொண்டு புன்னகை பூத்துவிட்டுச் சென்றான். ஆனால் ராமையருக்கு கதிகலங்கிவிட்டது. தாவிப்போய் மகனிடமிருந்து தர்மாப்புட்டியை வாங்கிக்கொண்டு, மருமகனைப் பார்த்து, "இந்தச் சின்னச் சீனுவை தாம்பா சொன்னேன்!" என்றார். அப்புறம் யோசனைகள் பல எழுந்தன ராமையருக்கு. 'சின்ன சீனு', 'பெரிய சீனு' என்று அடைமொழி கொடுத்து அழைப்பதா இருவரையும்? தன் மகனை கோபிப்பதும் அதட்டுவதும் இருபது தடவைக்குக் குறையாது ஒரு நாளைக்கு; அப்படியிருக்க, மருமகன் அவற்றைத் தனக்கிட்ட வசைகளாக எண்ணிவிட்டால்? ......அவன் அப்படி எண்ணாவிட்டாலும், அப்படி அழைப்பது தமக்கே அழகல்லவே.

ஒரே வழிதான் உண்டு தர்மசங்கடம் நீங்க. இருவருள் ஒருவர் பெயர் மாறவேண்டும்! தம் குழந்தை சீனுவை முழுத் திருப்பெயர் சீனிவாசன் என்றே அழைக்கலாம். ஆனால் அதனால் குழந்தைக்குத் தடுமாற்றமேற்படும்! வீட்டிலே ஏவல் காரியங்களுக்கெல்லாம் தயாராக ஓடிவரும் அவன், "சீனு! என்ற அழைப்புக்குப் பழக்கப்பட்டுப் போனவன். அவனுக்கு, சீனிவாசன் என்ற அழைப்புப் பெயர் குழப்பம் கொடுக்கும்........ அதனால் 'காசிச் சீனு'வின் பெயரை மாற்றவேண்டும்!........ ஆனால் என்னவென்று மாற்றுவது? ...... எப்படி அழைப்பது?

நல்லவேளை, அந்த சமயத்தில் "மாமா! எனக்கு இங்கே கடிதம் ஏதாவது வந்ததா? 'இங்கிருப்பேன், இந்த விலாசத்துக்கு எழுதலாம்,' என்று நண்பர்கள் சிலருக்குத் தெரிவித்திருந்தேன்" என்றான் மருமகன்.

'வரவில்லையப்பா! என்று சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தார் ராமய்யர்.

"சுவாமிநாதன்' என்று பெயரிட்டு எனக்குக் கடிதங்கள் அங்கே வரலாம். வைத்திருங்கள் பத்திரமாய்! வந்து பெற்றுக் கொள்கிறேன்! என்று அவன் விடுத்த கடிதம் இரண்டு நாள் முன் வந்ததும் நினைவு வந்தது ராமையருக்கு.

அடாடா! அவனுடைய நாமகரணப் பெயர்.... பள்ளியில் வழங்கும் பெயர்.....'சாமிநாதன்' இருக்கிறதே!' என்று சொல்லிக்கொண்டார் அடுத்தகணம்.

'இனி அப்படியே நாமும் அழைப்பதுதான் சரி.' என்று நிச்சயம் செய்து கொண்டுவிட்டார் அதற்கடுத்த விநாடி.

ரேடியோ நாடகங்களிலும்... ஏன் - அச்சு நாடகங்களிலும், நாவல்களிலும், சம்பாஷணைகளிலே - கேட்போருக்கும் படிப்போர்க்கும் தெளிவாக இருப்பதற்காக, பாத்திரங்க'ளின் பெயர்களை மிகுதியாகவே எதிரெதிர் பரிமாறிக்கொள்ள வைப்பார்களே, அதுபோல ராமையரும் ஆரம்பித்தார். சாமிநாதனின் பெயரைத் தவறியும் 'சீனு' என்று கூறாமலிருக்க, அவர் வாய்க்குவாய் அவனை 'சாமிநாதா! சாமிநாதா!' என்று அழைக்கலானார். அவசியம் இல்லாதபொழுதும் "சாமிநாதா! வா, சாப்பிட! சாமிநாதனுக்கு பலகை போடு!" என்றெல்லாம் அடிக்கொருதரம் மொழியலானார், ஒவ்வொரு தரமும் - அவர் அப்படி அடிக்கொரு தரம் மொழியும் போதும் - தன் செவியிலே அடிப்பது போன்றே இருந்தது அவனுக்கு!

தான் பிறந்தது இங்கேதான், தனக்கு 'சீனு' என்ற செல்லப் பெயரைத் தந்தது, அம்மாவைப் பெற்ற - அதாவது - இந்த மாமாவைப் பெற்ற - பாட்டி! இவரும் 'சீனு' என்றே இத்தனை நாளும் கூப்பிட்டுவிட்டு, யாரோ அசலார் போல 'சாமிநாதன்!' என்று இப்போது அழைக்கிறாரே என்று தோன்றியது அவனுக்கு, உள்ளூற ஆத்திரப்பட்டுக்கொண்டு இருந்தான் அவன்.

ஆரம்பத்திலே குறிப்பிட்டோமே, 'சாமிநாதா!' என்ற அழைப்புக்கு அவன் 'ஊம்!' கொட்டாமல் வாய்மூடி இருந்தானே! . . . அதுவும் அந்தக் கோபத்தின் பலன்தான்!

"நான் சீனுதான், சாமிநாதன் அல்ல!" என்று நாட்டிக்கொண்டிருந்த மறுநொடியே, "சாமிநாதன் நான்தான்! கடிதம் எனக்குத்தான்!" என்று அவன் ஒப்புக்கொள்ள நேர்ந்தது - மாமாவிடம்! எத்தனை அவமானம்? கடிதத்தைக் கொடுத்துப்போன ராமையர், வாசலில் தமக்கு வந்த கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். இங்கே உள்ளே சாமிநாதன், அருமை நண்பனின் மேல் கோபங்கொள்ளாமல், அவன் கடிதம் செய்துவிட்ட சதியை எண்ணிக் கலங்காமல் சாவதானமாகப் படித்து முடித்தான் தனக்கு வந்த கடிதத்தை.

ஒரு யோசனை எழுந்தது அவன் மனதிலே. 'ஆம்! அப்படித்தான் செய்யணும்! இங்கிருந்து தொலைந்துபோய்விடணும்!" என்று முடிவு கட்டிக்கொண்டிருந்தான்.

"என்ன, சாமிநாதா? கடிதத்திலே என்ன விசேஷம்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் ராமையர்.

'விசேஷம் இருக்கு மாமா. வேலை ஒன்று காலியாம்! உடனே நான் புறப்பட்டுப்போய் ரெயில்வே எஞ்சினியரைப் பேட்டி கண்டால் அனுகூலம் என்கிறான். நான் இன்று சாயங்காலம் வண்டிக்கே கிளம்பவேண்டும். இப்பொழுது மூன்று மணிதானே ஆகிறது?" என்று பதில் சொல்லிக்கொண்டே இடது மணிக்கட்டை உயர்த்தி கைக்கடியாரத்தைப் பார்த்தான் அவன்; அப்படிப் பார்க்கையிலே, ஒருகணம், எதிரே சுவரில் தொங்கிய புகைப்படம் ஒன்றின்மீது அவன் கண்கள் பதிந்ததை ராமையர் கவனித்தாரோ இல்லையோ!

"வேலை ஏற்பதாயிருந்தால், இந்தக் காசிப் படிப்பு என்ன ஆகும்? அரைகுறையாக நிற்பதா? நீ போகக்கூடாது இன்றைக்கு. வேலை கிடைக்காவிட்டால், இப்போது, ஒரு நஷ்டமுமில்லை!' என்றார் ராமையர் சிறிது பதற்றமாய்.

"என்ன மாமா இது! நான் இங்கே நான்கைந்து நாள் தங்குகிறதாகச் சொல்லியிருந்ததற்காக, இப்போது ஒரு நல்ல வேலையை விட்டுவிடுவதா? எப்படியும் போக வேண்டியவன். இன்றே போகிறேனே! . . . நான் போகத்தான் வேண்டும், மாமா!' என்று கூறிக்கொண்டே எழுந்து, தனது ஹோல்டால் மூட்டையருகே குனிந்தான் சாமிநாதன்.

"இதென்ன அக்கிரமம்! ஒன்றரை வருஷம் படித்துவிட்டு, பணம் ஆயிரம்வரை செலவிட்ட பின்பு நடுவிலே கையை உதறுவதுதானா விவேகம்? உன் அப்பா, அம்மா ஒப்பமாட்டார்கள். பள்ளிக்கூடம் போயிருக்கிற குழந்தைகள் வருமுன்பே, நீ ரயிலடிக்குப் போக வேண்டியிருக்கும். அவர்களைப் பார்க்கணும் என்ற ஆவல் உனக்குச் சிறிதும் இல்லை என்று தெரிகிறது...... பாவம் அவர்கள் தான் நாலுநாளாய் 'அத்தான் வரப்போகிறான்!' என்று குதியாய்க் குதித்துக்கொண்டிருந்தார்கள். பத்தரை மணிக்கு வந்துவிட்டு, மூன்றரை

மணிக்குப் போகணும் என்று சொல்கிறாய் பாரு! என்னமோ உன் இஷ்டம்போல் செய் . . . மூட்டை கட்டு! என்று மனத்தாங்கல் தொனிக்கப் பேசிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் ராமையர்.

"அவசரமில்லை மாமா! அவர்கள் வந்த பின், கொஞ்சம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, போனாலும், வண்டி கிடைக்கும், தப்பிவிடாது! இப்போ சம்மதம் தானே! . . . வலுவிலே கிடைக்கிற வேலையைத் தள்ளிவிட எனக்கு மனசில்லை மாமா!" என்றான் அவன் மீண்டும்.

"எம்.எஸ்.ஸி. தேறினால் பெரிய வேலை கிடைக்குமே!.... காசியிலே படிக்க உனக்கு இடம் கிடைக்க எவ்வளவு பாடுபட்டது! நினைவிருக்கா?" என்று தாக்கினார் ராமையர்.

கொஞ்சம் அவன் திடுக்கிட்டாலும், விட்டுக்கொடாமல் "ஆமாம் நிஜம்தான்!.... ஆனால் என்ன படிப்பு அங்கே ரொம்ப பிரமாதப்படுத்தறது! நினைத்ததெற்கெல்லாம், மாணவர்கள் 'ஸ்ட்ரைக்! பாடங்களே சரியாக நடப்பதில்லை! . . . இந்த வருஷம் நான் ஒன்றுமே புதிதாகக் கற்கவில்லை!"

"பெரிய கலாசாலையைப் பழிக்காதேப்பா! ஒன்றும் கற்காவிட்டாலும் அங்கே 'ஜே ஹிந்த்' முழங்கும் கோஷ்டியுடன் நீ சேர்வதே உனக்குச் சிறப்பு. உனக்கு சுதந்திர இந்தியாவிலே நன்மை கிட்டும்!.... என்னமோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன், அப்புறம் உன்னிஷ்டம்!" என்று ராமையர் சொல்கையிலே, மகன் சீனு 'தட தட' வென்று உள்ளே பாயும் ஓசை கேட்டது.

"இந்தா சீனு! நான்கு அணா, எட்டு கார்டுகள் வாங்கி வா!' என்றார்.

"போஸ்டாபீஸ் இருக்குமிடம் எனக்குத் தெரியாதே மாமா! என்றான் மருமகன்.

"உன்னைச் சொல்லவில்லையப்பா! எங்கள் சீனுவை..... அட, சமத்துக் குழந்தை சீனுவைச் சொன்னேன்!" என்று கூறிச் சிரித்தார் ராமையர்.

"இவனையா தனியாக போஸ்டாபீஸுக்கு அனுப்புவது?" என்றான் மருமகன்.

"கூப்பிடு தூரத்திலே தான் இருக்கிறது.... போய் வருவான். இந்தா சீனு! போய் வாங்கி வா! என்று பிள்ளையிடம் காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு, ராமையர் "பார்த்தாயா.... தவறிப் போய் அவனை' எங்கள் சீனு!" என்று குறிப்பிட்டுவிட்டேன்! நீ மட்டும் அயலானா? எல்லாம் இந்தப் பெயர் குழப்பம்தான் - இல்லை- பெயர் பொருத்தம்தான் காரணம் இல்லையா?" என்று சொல்லி, சிரித்தார் ராமையர்.

வாசலில் ஒரு ஜட்கா நிற்கும் சலங்கை ஒலி கேட்டது.

"அதோ பத்மா வந்து விட்டாள் போலிருக்கே! நாலு மணியாகவில்லை. ஆனால் சீக்கிரம் வந்துவிட்டாள்போலிருக்கு இன்றைக்கு," என்றவண்ணம் ஜன்னல் வழியாக நோக்கினான் சாமிநாதன்.

"என்ன, சாமிநாதா!... என்ன சொல்கிறாய்? இந்த ஜட்காகாரனை வரச்சொல்லட்டுமா, உன்னை ஸ்டேஷனுக்கு அழைத்துப்போக? வண்டியிலே இன்னும் இரண்டு பெண்கள் இருப்பார்கள்; அவர்களை இறக்கிவிட்டு வரச்சொல்லட்டுமா? . . . பயணம் நிச்சயம்தானா?" என்று வினவினார் ராமய்யர்.

பதில் வரவில்லை அவனிடமிருந்து; ஒருமாதிரி திடுக்கிட்டு நின்றான். அவருடைய வார்த்தைகள் அவனுடைய செவியில் விழுந்தனவோ, இல்லையோ.... பத்மாவுக்கு எட்டிவிட்டன அவை.

"யார் பயணம்! அத்தானா? இன்றைக்கேயா?" என்று கேட்டுக்கொண்டே, வாசற்படியருகு வந்து நின்றாள் பத்மா.

"உன் பதில் கிடைக்குமுன் வண்டி போய்விட்டதேப்பா!' என்றார் ராமையர் - வருத்தமும் காட்டவில்லை அவர் முகம், மகிழ்ச்சியும் காட்டவில்லை.

"உங்கள் ஊரிலே வேறு ஜட்காவே கிடையாதோ?" என்று சொல்லிச் சிரித்தான் சாமிநாதன், பத்மாவைப் பார்த்துக்கொண்டே. வாசற்படிக்கு ஒதுக்காகி, கால் செருப்பை உதறிக்கொண்டே, "என்னப்பா, அத்தான்தானா இன்றைக்குப் போகணும் என்கிறான்?" என்று அப்பாவைப் பார்த்துக் கேட்டுவிட்டு, உள்ளே வந்துவிட்டாள் பத்மா அங்கிருந்த மேஜை மேல் புத்தகங்களை வைத்துக்கொண்டே, "என்ன மாமாவுக்கும் மருமானுக்கும் சண்டையோ?" என்று கூறி குறும்பாகச் சிரித்தாள் பத்மா.

சாமிநாதனும் மெல்லச் சிரித்தான்.

"இல்லாவிட்டால், மத்தியானம் டிபன் சரியில்லையோ? என்ன அத்தான், சொல்லு! நான் அம்மாவிடம் சொல்லி, உனக்குப் பிடித்ததைப் பண்ணச் சொல்கிறேன்!' என்றாள் பத்மா.

'உளறாதே பத்மா!. . . சாமிநாதனுக்கு ஏதோ உத்தியோகம் கிடைக்கிறதாம் . . ." என்று இழுத்தார் ராமையர்.

"யார் அது சாமிநாதன்!....... எங்கே வேலை....."

"இவன் தான் சாமிநாதன்....."

"இவன் பேர் சீனு இல்லையோ..... என்னப்பா இது?"

"ஆனால் இங்கே இருக்கிறானே உன் தம்பி . . . ஒரு குட்டிச் சீனு! எப்படி அழைக்கிறது இருவரையும் ஒரே பெயரில்! சங்கடமாய்ப் போய்விட்டது எனக்கு! ." என்று தன் தவிப்பைக் காட்டினார் முகத்திலே ராமையர்.

"ஓகோ....." என்று சிரித்துவிட்டு பத்மா "நம்ம சீனு பெயரை மாற்றி . . . " என்றாள்.

"யார் நம்ம சீனு! உன் தம்பியா, உன் அத்தானா? அத்தானை அவமதிக்கிறாயே பத்மா! அவன் ஏன் மூட்டை கட்டமாட்டான் இப்போதே?" என்று கோபிப்பது போலக் குறுக்கிட்டார் ராமையர்.

"அடடா! .. . ஆமாம்!. ஆமாம்! அத்தான், தப்புத்தான்! . . . சரியப்பா! அத்தான் பெயரை மாற்ற வேண்டியதுதான்! ஆனால் ஏனப்பா 'சாமிநாதன்' என்று மாற்றணும்? உனக்கென்ன அந்தப் பெயரில் அவ்வளவு மோகம்?" என்று கேட்டாள் பத்மா.

"அவனையே கேள்" என்று சொல்லிக்கொண்டே கட்டிலின் மீது கிடந்த - அன்று வந்த கடித உறையை - அவளிடம் நீட்டினார் ராமைய்யர்.

'அத்தான், உனக்கு வந்த கடிதமா இது?" என்று அவன் பக்கமாக தன் கையிலிருந்த உறையை நீட்டிக் கேட்டாள் பத்மா.

"ஆமாம்!" என்றான் அவன். அவன் கையிலிருந்த கடிதத்தை வாங்கிக்கொள்ள முயற்சி செய்யவில்லை அவன்.

"சாமிநாதன் என்று தானே போட்டிருக்கு விலாசத்திலே!" என்று கிண்டினாள் மேலும் பத்மா.

"நான் அப்படிக் கூப்பிடுவது அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ, அதான் 'மூட்டை கட்டுகிறேன்,' என்கிறான்!" என்றார் திடுக்கென்று ராமையர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை மாமா . . நான் . . . " என்று இழுத்தான் சுவாமிநாதன்.

"உன் பெயர் சீனுவோ, சாமிநாதனோ எதுவாயிருந்தால் என்ன? இங்கே யார் உன்னை பெயர் சொல்லி அழைக்கப்போகிறார்கள்? நாங்கள் எல்லோரும் "அத்தான்!" என்றுதான் அழைக்கப்போகிறோம். இதிலே வருத்தம் என்ன அத்தான்?" என்று கொஞ்சுவதுபோல பேசினாள் பத்மா.

அவளுடைய ஜோதி முகத்தைப் பார்த்தவாறே இருந்தான் சாமிநாதன். ஒரு கனைப்புக் கனைத்தார் ராமையர்.

"என்ன சொன்னாய் பத்மா? எனக்குக்கூட அத்தானா அவன்? உன் அம்மாவுக்கும் அத்தானா? நாங்கள் இவனை என்னவென்று அழைப்பது? மருமகனே, மருமானே என்று உறவு முறை சொல்லிக்கொண்டு கூப்பிடுவதா? நான் கூப்பிடுவதில் தானே குழப்பமே வந்தது! பேர் மாற்றிக் கூப்பிட ஆரம்பித்தேன்! . . . " என்றார் ராமையர்.

"நானும் அதைப் பொறுக்க முடியாமல் துள்ளி ஓடி விடுவேன், மான்போல, காட்டுக்கு!" என்று சிரித்தான் சாமிநாதன்.

"காசிப்படிப்பு இனிமேல் வேண்டாமாம்! உத்தியோகம் பார்க்கப் போகிறானாம்! அதற்காகத்தான் இன்றே ஊருக்குப் போகணுமாம், உன் அத்தான் சொல்கிறான்!" என்றார் ராமையர்.

"அப்படியா அத்தான்?" என்றாள் பத்மா ஆச்சர்யமாக.

"ஆமாம் . . போகணும் . . . " என்று ஒருமாதிரியாகச் சொன்னான் பதில்.

"காசிக்குப்போய் வருபவர்கள் எதையேனும் விட்டுவிட்டு வருவார்கள்; நீ படிப்பையே விட்டுவிடுகிறாய் போலிருக்கு!" என்று கேலி செய்தாள் பத்மா.

"ஆம், அப்படித்தான் நேரும் போலிருக்கு! படிப்பதெல்லாம் எதற்கு? கடைசியில் ஒரு உத்தியோகத்தில் அமர்வதற்குத்தானே! உத்தியோகம் இப்போதே கிடைக்கிறது . . . அதனால் . . . ". தடுமாறினான் சாமிநாதன்.

"என்ன உத்தியோகம்?" என்று வினவினார் ராமையர்.

"அதெல்லாம் அப்புறம் உங்களுக்குத் தெரியும் . . . " என்று பதில் வந்தது அதே வீம்புடன்.

"இதிலே எழுதியிருக்கலாமல்லவா?...." என்று சொல்லித் துள்ளிக்கொண்டே அங்கிருந்து விரைந்து சென்றாள் பத்மா, கையில் கடிதத்துடன்.

"இதென்ன அக்கிரமம் பத்மா! .எனக்கு வந்த கடிதத்தை நீ எடுத்துக்கொண்டு ஓடுகிறாயே!" என்று சாமிநாதன் கூச்சலிட்டானே தவிர, அவளிடமிருந்து கடிதத்தைப் பிடுங்க முயலவில்லை.

"பார் அவள் தைரியத்தை! கூறாமல் படிக்கிறாளே தனக்கு வந்ததுபோல!" என்று விஷமமாய்ச் சிரித்தார்.

அதைக் கவனித்துவிட்டு..... கவனிக்காததுபோல..... "படிக்கட்டும், அவளும் நான் சொன்னது சரிதான் என்பாள்!" என்று சாமிநாதன் கூறிவிட்டு, விரித்த ஹோல்டால் கித்தானைச் சுருட்டினான்.

இப்போது சாமிநாதனுக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை. ஊருக்குப் போவதாக வீம்பு பேசிவிட்டான். ஆனால் அவன் மனசு "ஏன் சொன்னோம்!" என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

மத்தியானம் சாப்பிட்டுவிட்டுக் காமிரா அறைக்குள் நுழைந்தபோது, அவன் அங்கே சுவரில் மாட்டியிருந்த பத்மாவின் புகைப்படத்தைப் பார்த்தபோது 'அவள் எப்போது பள்ளியிலிருந்து வருவாள்? எப்போது நேரில் இந்த அழகிய உருவத்தைப் பார்ப்போம்?' என்று எண்ணினான். அப்புறம் வெகுநேரம் அவளைப் பற்றி எண்ணமிட்டான்.

உலகத்திலே யாருமே பதினாலு வயதில் எஸ்.எஸ்.எல்.ஸி படிக்காததுபோல, பத்மா பதினாலு வயதில் அந்த வகுப்பில் படிப்பதைப் பற்றி வியந்தான். அவளைப் பார்த்து ஆறு வருஷங்களாவதால், தன்னைக் கண்டதும் அவள் பேசவும் கூசுவாள் என்று நினைத்தான். அவள் தன் தம்பியைச் 'சீனு, சீனு!' என்று அழைக்கும்பொழுதெல்லாம் தனக்கு எப்படியிருக்கும், என்ன இனிமையாய், இன்பமாய் இருக்கும், என்று கற்பனை செய்து அனுபவித்தான். அவள் தம்பியைக் கூப்பிட்டால் வேடிக்கையாக, தான் போய் எதிரே நின்று, "என்ன வேணும்? கை கட்டி நிற்கிறேன்!" என்று கூட தமாஷ் பண்ணலாம் என்று யோசனை செய்திருந்தான்.

ஆனால் பத்மா வந்தபின் ஒரு சந்தோஷ ஏமாற்றம்;ஒரு வருத்த ஏமாற்றம் அவனுக்கு.

அவனே தன் பெயர் மாறுவதை ஒப்பிவிட்டதால் 'தான் கற்பனை செய்திருந்த தமாஷ்களும்.... இன்பமும்...... போய்விட்டனவே' என்ற வருத்தம் - ஆனால் அவள் கூச்சமில்லாமல் தன்னுடன் நேருக்கு நேர் பேசவும், வாதாடவும் முன் வந்ததைப் பற்றி சந்தோஷம் அவனுக்கு. ஏதோ அசட்டுக் கோபத்தில் ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டதற்கு வருத்தம் எழுந்தது அவனுக்கு.... ஆனால் எப்படி திடீரென்று மறுபடி மாற்றுவது?

அர்த்தமில்லாமல் ஹோல்டாலைச் சுருட்டினான்.

'இந்தாப்பா, கார்டுகள்!' என்ற குரல் வந்தது. சீட்டுப் பிரித்துப் பிடிப்பதுபோல் எட்டு கார்டுகளை பிடித்துக்கொண்டு, சீனு உள்ளே நுழைந்தான். ராமையர் அவற்றை வாங்கிக் கொண்டார்.

'சாமிநாதா' நீ பத்திரமாய் இங்கு வந்து சேர்ந்ததைப்பற்றி உன் அப்பாவுக்கு எழுதணும் என்று இருக்கிறேன். இன்றே நீ போத்தனூருக்குப் புறப்பட்டுப் போவதாக எழுதட்டுமா?.... இன்னும் ஏதாவது செய்தி உண்டா, சொல்!' என்று உசாவினார் ராமையர்.

"இப்போதே என்ன அதற்கு அவசரம்!" என்று குழறினான் சாமிநாதன், மழுப்பிவிடும் நோக்கத்துடன்.

"தபால் கட்டு எடுக்கும் வேளை வந்துவிட்டதப்பா!" என்று ராமையர் சொல்லுகையிலேயே பத்மா திரும்பினாள் அறையுள்.

"என்ன எழுதியிருக்கு சொல்லட்டுமா அத்தான்!" என்று மிரட்டுவதுபோல கேட்டாள் பத்மா.

"சொல்லேன்!" என்று கூறிக்கொண்டே, தலையை அசைத்து, கண்ணையும் சிமிட்டினான் அவன். ராமையர் அதைக் கவனித்தாரோ என்னமோ...

ஒரே பதட்டமும் மிரட்டலுமாகத் தோன்றிய பத்மா, சிறிது தயங்கினாள்.

"சரி, சொல்லு! என்ன உத்தியோகம் அது?" என்று விடாப்பிடியாகத் தொடர்ந்தார் ராமையர்.

மென்று விழுங்கிக்கொண்டே "சரியாகத் தெரியல்லையப்பா எனக்கு; ரொம்ப மட்டமான உத்தியோகம் தான்.... ஏன் அத்தான், நிலக்கரிச் சாம்பலிலா நீ வேலை செய்வது? அழகுதான்! ஸ்வாமியும் நாதனுமான சாமிநாதனுக்குச் சரியான வேலை இது அல்லப்பா! என்ன அத்தான்?." என்று மாறி மாறி இருவரையும் பார்த்துக்கொண்டே சொல்லி முடித்தாள் பத்மா.

"எங்கே கொடு, கடிதம் நான் பார்க்கிறேன்!" என்று ராமையர் கேட்கவில்லை. அவர்களைக் குறும்பாகப் பார்த்தார் அவ்வளவுதான். சாமிநாதனின் கடிதத்தைப் பார்க்க பத்மாவுக்கு இருக்கும் உரிமை தமக்கு இல்லைபோல சும்மாயிருந்துவிட்டார்!

"சரி மாமா... நான் அந்த வேலைக்குப் போகவில்லை. நீங்கள் சொன்ன மாதிரி காசிப் படிப்பு முடிந்துவிடட்டும்! பெரிய வேலை, நல்ல வேலையாகும்! இங்கே நான் ஒரு வாரம் இருந்துவிட்டு வருகிறேன் என்று அப்பாவுக்கு எழுதிவிடுங்கள்!" என்று புன்னகையுடன் பத்மாவின் பதிலுக்கு ஒப்பினான் சாமிநாதன்.

"அப்படி வா வழிக்கு! சாமிநாதன் என்ற எங்கள் அழைப்புக்கு நீ இணங்கியிருக்கிறாய் என்றும் குறிக்கட்டுமா, சாமிநாதா?..... உனக்குச் சம்மதம்தானே....." என்றார் ராமையர்.

"காசிக்குப்போய் வருபவர்கள் தமக்குப் பிரியமானது ஏதாவதொன்றை விட்டுவிடுவார்கள் என்றுதான் பத்மா சொல்லிவிட்டாளே! நானோ படிப்பைவிடவில்லை! எனக்குப் பிடித்தமான 'சீனு' என்ற பெயரைத் துறந்து விடுகிறேன்! இனிமேல் எங்கும், யார்க்கும், எப்போதும் நான் "சாமிநாதனே!" என்றான் சாமிநாதன், சபையிலேயே தனக்கு யாரோ புகழ்மாலை இட்டுவிட்டது போன்ற கர்வம் தொனிக்க.

"தங்கம்! உள்ளே என்ன பண்ணிண்டிருக்கே! வா பாரு! இனிமேல் இவனை "சாமிநாதா!" என்றுதான் அழைக்கணும் நீயும்!" என்று மனைவியிடம் சொல்ல சமையலறை நோக்கிப்போனார் ராமையர்.

"பத்மா, நல்லவேளை என் மானத்தைக் காத்தாய்!. கடிதத்தைப் பற்றி என்ன சொல்லிவிடுவாயோ என்று பயந்தேன். கெட்டிக்காரி, நீ! சமாளித்துவிட்டாய்!" என்று இங்கே குழறினான் பத்மாவிடம் சாமி - நாதன், அவள் கன்னத்தை மெள்ளத் தட்டிக்கொண்டே.

"மருமானின் காசியாத்திரையில், பெயரை விட்டுவிடுவது மட்டும்தானா நடப்பது? காசியாத்திரைக்கப்புறம் என்ன தெரியாதா?" என்று கேட்டுக் கொண்டே தங்கம்மாள், ராமையர் பின்தொடர வந்தாள்.

"கோவிச்சுண்டு கிளம்பற மாப்பிள்ளை மாதிரி நீயும் ஊருக்குக் கிளம்பறதாகச் சொன்னாயாமே, சாமிநாதா! பத்மாதான் ராஜி பண்ணி நிறுத்தினாளாக்கும்!" என்று மருமகனை ஒருபோடு அருமையாகப் போட்டாள் மாமி.

**********

(சுதேசமித்திரன், டிசம்பர் 28, 1947)